**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | குமாரசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன்.

கடந்த 22.03.2009-ம் தேதி நான், கிஷோர்குமார் மற்றும் அவரது கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து 2003-ம் வருடம் எதிரி நேருவிவேகானந்தனை கடத்தி சென்றதாக எங்கள் மீது கடத்தியதற்காகவும், ஜாதி பெயரை சொல்லி பேசியதற்காகவும் ஒரு பொய் புகாரானது பதியப்பட்டது. அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் ஈரோடு டவுன் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்து, பொய்வழக்கு என்று வழக்கு கோப்புகளை திருப்பி அனுப்பி விட்டார்.

அதன்பின்னிட்டு மீண்டும் 22.11.2010-ம் தேதி இதேபோல எதிரி நேருவிவேகானந்தனை மிரட்டியதாக அவர் கொடுத்த பொய் புகாரின் பேரில், குற்றப்பிரிவில் என்னை விசாரித்து, அது சிவில் வழக்கு என்று அதுவும் முடித்து வைக்கப்பட்டது. அதன் பின்னிட்டு, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில், உத்தரவு பெற்று, ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் மற்றொரு புகார் பதிவு செய்யப்பட்டு, துணை காவல் கண்காணிப்பாளர் விசாரித்து, ஜாதி வன்முறைக்கு எதிராக தனிப்பிரிவு என்னை விசாரித்து, பொய்வழக்கு என்று முடித்து வைக்கப்பட்டது.

இவ்வாறு என்மீது போடப்பட்ட அனைத்து பொய் வழக்கு களையும் முடித்து விட்ட பின்னர், மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் RDO என்னை விசாரித்தார். அதுவும் 2017-ல் பொய்வழக்கு என்று முடித்து வைக்கப் பட்டது. அதன்பின்னிட்டு நான் நீதிமன்றத்தில், ஒரு தனிநபர் மனுவை தாக்கல் செய்தேன். நீதிமன்ற உத்தரவு படி ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில், இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | குப்புசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, மஞ்சள் வியாபாரம் செய்து வருகிறேன்.

நான் எதிரி நேருவிவேகானந்தனுக்கு 02.06.2002-ம் தேதி பணம் 50 ஆயிரம் ரொக்கத்தை கடனாக கொடுத்தேன். அவர் அதற்கு மறுபயனாக Oriental Bank-ன் ஒரு நிரப்பப்பட்ட காசோலையை என்னிடம் வழங்கினார். அந்த காசோலையை வங்கியில் செலுத்தியபோது, அது பணப் பற்றாக்குறையால் திருப்பி அனுப்பப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

அதன்பின்னிட்டு 22.03.2009-ம் தேதி நான், கிஷோர்குமார், செல்வராஜ் ஆகியோர் எதிரியை கடத்தி, ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக பொய்புகார் கொடுத்தார். ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள். ஈரோடு நகர துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். நான் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்ததால், என்மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது. 2010-ம் வருடம் எதிரிக்கு எதிராக காசோலை வழக்கு தீர்ப்பானது. மற்றொரு பொய்வழக்கும் எதிரியால் என்மீது போடப்பட்டு, ஆட்சியரின் உத்தரவின் பேரில் விசாரிக்கப் பட்டு, அதுவும் முடித்து வைக்கப்பட்டது. 2017-ம் ஈரோடு மாவட்ட விழிப்பு கண்காணிப்பு குழு விசாரித்து, அனைத்து பொய்புகார்களையும் முடித்து வைத்தது. இறுதியாக நீதிமன்றத்தில், தனிநபர் மனு செல்வராஜ்-ஆல் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது இந்த வழக்கில் நான் சாட்சியமளிக்கிறேன். எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்தேஷ்வரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஜெயபிரகாசம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, ஜவுளி தொழில் செய்து வருகிறேன்.

சுமார் 2002-ம் வருடம் எதிரி நேருவிவேகானந்தன் ஒரு வீடு விற்பனை செய்வதற்காக என்னிடம் சாட்சியாக இருக்க கூறி என்னிடம் கையொப்பம் கேட்டார், நானும் கையொப்பம் செய்தேன். 2009-ம் வருடம் மீண்டும் என்னை வந்து தொடர்பு கொண்டு, கிரையத்தை செல்லாமல் செய்வதற்காக என்னை சாட்சி சொல்ல சொன்னார், நான் மறுத்தேன். அதன் பின்னிட்டு, அவர் என்மீது 2009-ம் வருடம் ஜாதி ரீதியாக அவரை தரக்குறைவாக பேசியதாக என் மீது பொய்புகார் அளித்தார். அதை DSP

விசாரித்து, பொய்புகார் என முணணடித்து வைத்தார்.

2010-ல் இதே போல பொய்புகார் கொடுத்து, மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில், விழிப்பு குழு ADSP விசாரித்து, அதுவும் பொய்புகார் என்று முடித்து வைக்கப்பட்டது. 2012-ம் வருடம் மீண்டும் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் பொய் என்று தெரிந்து முடித்து வைக்கப்பட்டது. இந்த வழக்கானது செல்வராஜ் எதிரி நேருவிவேகானந்தன் மீது போடப்பட்ட வழக்காகும். இந்த வழக்கைப் பற்றி எனக்கு இவ்வளவு தான் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

## வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.172/2017

## வழக்கு சாட்சி.அ.சா.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மாறப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, ஒரு நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன்.

கடந்த 2003-ம் வருடம் நேருவிவேகானந்தன் ஒரு இடத்தை விற்பனை செய்வதற்காக என்பெயரில் 23.04.2003-ம் வருடம் ஒரு பொது அதிகாரப் பத்திரத்தை என் பெயரில் எழுதி வைத்தார். அவர் சொன்னதன் பேரில் 19.05.2008-ம் தேதி கிஷோர்குமாரிடம் 40 ஆயிரம் மறுபயன் பெற்று, இரசீது பெற்று கிரையம் செய்து வைத்து, பணத்தை எதிரியிடம் கொடுத்து விட்டேன்.

இந்த சமயத்தில் இட மதிப்பு கூடுதலின் பேரில் நேருவிவேகானந்தன் கிஷோர்குமாரிடம் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக கேள்விப்பட்டேன். கிரையப் பத்திரம் வங்கியில் எதிரியால் அடமானம் வைக்கப்பட்டு, அவர் அந்த பத்திரத்தை கிஷோர்குமாரிடம் கொடுக்கவே இல்லை. அந்த சமயத்தில் 2009-ம் வருடம் நான், கிஷோர்குமார், செல்வராஜ் ஆகியோர் எதிரியை அடித்து மிரட்டி, ஜாதி பெயரை சொல்லி மிரட்டியதாக எங்கள் மீது பொய்புகார் பதியப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் ஈரோடு டவுன் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்து, பொய்வழக்கு என்று வழக்கு கோப்புகளை திருப்பி அனுப்பி விட்டார்.

அதன்பின்னிட்டு மீண்டும் 22.11.2010-ம் தேதி இதேபோல எதிரி நேருவிவேகானந்தனை மிரட்டியதாக அவர் கொடுத்த பொய் புகாரின் பேரில், குற்றப்பிரிவில் என்னை விசாரித்து, அது சிவில் வழக்கு என்று அதுவும் முடித்து வைக்கப்பட்டது. அதன் பின்னிட்டு, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில், உத்தரவு பெற்று, ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் மற்றொரு புகார் பதிவு செய்யப்பட்டு, துணை காவல் கண்காணிப்பாளர் விசாரித்து, ஜாதி வன்முறைக்கு எதிராக தனிப்பிரிவு என்னை விசாரித்து, பொய்வழக்கு என்று முடித்து வைக்கப்பட்டது. பின்னர் மாவட

இவ்வாறு எங்கள் மீது போடப்பட்ட அனைத்து பொய் வழக்கு களையும் முடித்து விட்ட பின்னர், மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் RDO என்னை விசாரித்தார். அதுவும் 2017-ல் பொய்வழக்கு என்று முடித்து வைக்கப் பட்டது. அதன்பின்னிட்டு செல்வராஜ் நீதிமன்றத்தில், ஒரு தனிநபர் மனுவை

தாக்கல் செய்தார். நீதிமன்ற உத்தரவு படி ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில், இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, ஒரு நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன்.

கடந்த 2003-ம் வருடம் நேருவிவேகானந்தன் ஒரு இடத்தை விற்பனை செய்வதற்காக என்பெயரில் 23.04.2003-ம் வருடம் ஒரு பொது அதிகாரப் பத்திரத்தை என் பெயரில் எழுதி வைத்தார். அவர் சொன்னதன் பேரில் 19.05.2008-ம் தேதி கிஷோர்குமாரிடம் 40 ஆயிரம் மறுபயன் பெற்று, இரசீது பெற்று கிரையம் செய்து வைத்து, பணத்தை எதிரியிடம் கொடுத்து விட்டேன்.

இந்த சமயத்தில் இட மதிப்பு கூடுதலின் பேரில் நேருவிவேகானந்தன் கிஷோர்குமாரிடம் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக கேள்விப்பட்டேன். கிரையப் பத்திரம் வங்கியில் எதிரியால் அடமானம் வைக்கப்பட்டு, அவர் அந்த பத்திரத்தை கிஷோர்குமாரிடம் கொடுக்கவே இல்லை. அந்த சமயத்தில் 2009-ம் வருடம் நான், கிஷோர்குமார், செல்வராஜ் ஆகியோர் எதிரியை அடித்து மிரட்டி, ஜாதி பெயரை சொல்லி மிரட்டியதாக எங்கள் மீது பொய்புகார் பதியப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் ஈரோடு டவுன் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்து, பொய்வழக்கு என்று வழக்கு கோப்புகளை திருப்பி அனுப்பி விட்டார்.

அதன்பின்னிட்டு மீண்டும் 22.11.2010-ம் தேதி இதேபோல எதிரி நேருவிவேகானந்தனை மிரட்டியதாக அவர் கொடுத்த பொய் புகாரின் பேரில், குற்றப்பிரிவில் என்னை விசாரித்து, அது சிவில் வழக்கு என்று அதுவும் முடித்து வைக்கப்பட்டது. அதன் பின்னிட்டு, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில், உத்தரவு பெற்று, ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் மற்றொரு புகார் பதிவு செய்யப்பட்டு, துணை காவல் கண்காணிப்பாளர் விசாரித்து, ஜாதி வன்முறைக்கு எதிராக தனிப்பிரிவு என்னை விசாரித்து, பொய்வழக்கு என்று முடித்து வைக்கப்பட்டது. பின்னர் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், மாவட்ட விழிப்பு குழு எங்களை விசாரித்து, அந்த புகாரும் முடித்து வைக்கப்பட்டது.

இவ்வாறு எங்கள் மீது போடப்பட்ட அனைத்து பொய் வழக்கு களையும் முடித்து விட்ட பின்னர், மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் RDO

என்னை விசாரித்தார். அதுவும் 2017-ல் பொய்வழக்கு என்று முடித்து வைக்கப் பட்டது. அதன்பின்னிட்டு செல்வராஜ் நீதிமன்றத்தில், ஒரு தனிநபர் மனுவை தாக்கல் செய்தார். நீதிமன்ற உத்தரவு படி ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில், இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.